செய்தி வெளியீட்டு எண்:91/2024 நாள்:01.08.2024

<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்</u>

<u>எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை.</u>

<u>செய்தி வெளியீடு</u>

<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் பல்வேறு துறைகளில் காலிப்பணியிடங்களை நிரப்ப 6032 நபர்கள் தேர்வு</u>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் கடந்த 01.05.2024 முதல் 31.07.2024 வரையிலான காலத்தில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு தொகுதி - IIA ல் அடங்கிய பதவிகளுக்கு 5413 நபர்களும், வேளாண்மை அலுவலர்(விரிவாக்கம்) பதவிக்கு 51 நபர்களும், தோட்டக்கலை அலுவலர் பதவிக்கு 85 நபர்களும், உதவி வனப் பாதுகாவலர் பதவிக்கு 9 நபர்களும், ஒருங்கிணைந்த கணக்குப் பணிகள் அடங்கிய பதவிகளுக்கு 43 நபர்களும் உதவி வேளாண்மை அலுவலர் பதவிக்கு 82 நபர்களும், உதவி தோட்டக்கலை அலுவலர் பதவிக்கு 157 நபர்களும், பணிமேற்பார்வையாளர்/இளநிலை வரைதொழில் அலுவலர் பதவிக்கு 91 நபர்களும் மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப மொத்தம் 6032 நபர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

ச.கோபாலசுந்தரராஜ், இ.ஆ.ப.,

செயலாளர்